வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV

(தொகுதி-IV பணிகள்)

தேர்வு: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

பாடம் : தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

பகுதி : அலகு I: இலக்கணம் - சந்திப்பிழை & ஒற்றுப்பிழை அறிதல்

உள்ளடக்கம்

சந்திப்பிழை.....1

வல்லினம் மிகும் இடங்கள்.....4

வல்லினம் மிகா இடங்கள்.....8

மாதிரி வினாக்கள்.....12

முந்தைய ஆண்டு வினாக்கள்.....19

© Copyright

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

Director,
Department of Employment and Training.

சந்திப்பிழை & ஒற்றுப்பிழை அறிதல்

ஒரு சொல்லின் முதலில் வரும் வல்லின மெய்யெழுத்துகளான (க், ச், த், ப்) எழுத்துகள், மற்றொரு சொல்லுடன் இணையும்போது தவறாகச் சேர்க்கப்படுவதோ அல்லது சேர்க்கப்பட வேண்டிய இடத்தில் விடுபடுவதோ சந்திப்பிழை (அல்லது ஒற்றுப்பிழை) எனப்படும்.

வல்வலெழுத்துக்கள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலை மொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துக்கள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு எந்தெந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டு மூலமும் அறியலாம்.

சந்திப்பிழை இரண்டு வகைப்படும்:

- மிகும் இடங்கள்: வல்லின எழுத்துகள் (க், ச், த், ப்) வரவேண்டிய இடத்தில் வராமல் போவது.
- மிகா இடங்கள்: வல்லின எழுத்துகள் தேவையில்லாத இடத்தில் வருவது.



மிகும் இடங்கள்

ஒரு சொல்லின் முதலெழுத்து **க, ச, த, ப** ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய் எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர்.

மிகா இடங்கள்

எல்லா இடங்களிலும் வல்லின மெய் எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.

வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமன்று. செய்திகளில் கருத்துப் பிழையோ, பொருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கும் வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.

உதாரணம்:

- மண்வெட்டி கொண்டு வா - **மண்வெட்டியை எடுத்து வா** என்னும் பொருளைத் தருகிறது.
- மண்வெட்டிக் கொண்டு வா - **மண்ணை வெட்டி எடுத்து வா** என்னும் பொருளைத் தருகிறது.
- கடைபிடித்தல் – **கடையைப்பிடித்தல்;** சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடைபிடித்தார்.
- கடைப்பிடித்தல் – **பின்பற்றுதல்;** நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.
- தோப்புக்கள் - தோப்பில் இருந்து இறக்கப்பட்ட கள் (பானம்)
- தோப்புகள் - பல மரங்களை உடைய தோப்பு
- கத்தி கொண்டு வந்தான் – **கத்தி என்னும் ஆயுதம்** கொண்டு வந்தான்

- கத்திக்கொண்டு வந்தான் – **சத்தமிட்டுக்கொண்டு** வந்தான்

வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

வல்லினம் மிகும் இடங்கள்

சுட்டெழுத்து மற்றும் சுட்டுத் திரிபு

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும் வல்லினம் மிகும்.

உதாரணம்: அச்சட்டை, இந்தக்காலம், உப்பக்கம் (செய்யுள் வழக்கு)

வினா எழுத்து மற்றும் வினாச்சொல்

எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்.

உதாரணம்: எத்திசை?, எந்தப்பணம்?

வேற்றுமை உருபுகள்

“ஐ” என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.

உதாரணம்: கதவைத்திற, தகவல்களைத்திரட்டு, காட்சியைப்பார், பாரியைக் கண்டான, பொருளைச் சேர்த்தான், அவனைத் தடுத்தான், நிலவைப் பார்த்தான்

“கு” என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.

உதாரணம்: முதியவருக்குக்கொடு, மெட்டுக்குப்பாட்டு, ஊருக்குச்செல், குழந்தைக்குச் சோறு, அவளுக்குத் தா, பாப்பாவுக்குப் பாட்டு

சொல்லுருபு

“என, ஆக” போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும்.

உதாரணம்: எனக்கேட்டார், வருவதாகக்கூறு.

மேலும் சில வல்லினம் மிகும் இடங்கள்

- அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
    - அதற்குச்சொன்னேன்
    - இதற்குக்கொடு
    - எதற்குக் கேட்கிறாய்
- இனி,தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும்.
    - இனிக்காண்போம்
    - தனிச் சிறப்பு
- மிக, விட என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
    - மிகப் பெரியவர்
    - விடப் பெரியது
- எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும்.
    - எட்டுத்தொகை
    - பத்துப்பாட்டு
- ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.
    - தீப் பிடித்தது
    - பூப் பந்தல்
    - தைத்திங்கள்
- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும்.
    - கூவாக் குயில்

- ஓடாக் குதிரை

- வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும்.
  - கேட்டுக் கொண்டான்
  - விற்றுச் சென்றான்
- (அகர. இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும்.
  - ஆடச் சொன்னார்
  - ஓடிப் போனார்
- ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
  - புலித்தோல்
- திசைப் பெயர்களின்பின் வலிமிகும்.
  - கிழக்குப் பகுதி
  - வடக்குப் பக்கம்
- இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.
  - மல்லிகைப்பூ
  - சித்திரைத்திங்கள்
- உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.
  - தாமரைப்பாதம்
- சால, தவ,தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும்.
  - சாலப் பேசினார்

- தவ**ச்**சிறிது

- தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும்.
  - நிலா**ச்** சோறு
  - கனா**க்** கண்டேன்
- சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.
  - வாழ்க்கை**ப்**படகு
  - உலக**ப்**பந்து
- பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
  - பச்சை**ப்**பட்டு
- இரண்டு, மூன்று, நான்காம், ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.
  - தண்ணீர்**க்**குடம்
  - மர**ப்**பெட்டி
  - பூட்டு**ச்**சாவி
- முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
  - திரு**க்**கோவில்
  - முழு**ப்**பக்கம் (**திரு, முழு** என்பவை முற்றியலுகரம்)
- நிலைமொழி உயிரீற்றுச் சொல்லின்பின் வல்லினம் மிகும்.
  - ஒரு சொல்லின் இறுதியில் உயிர் எழுத்து (அ, ஆ, இ, ஈ...) ஒலியுடன் முடிந்தால் அது உயிரீற்றுச் சொல் எனப்படும்.

- பலா**ச்**சுளை

- சில மென்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்
  - குரங்கு**க்** குட்டி, மருந்து**ச்** சீட்டு, கன்று**க்**குட்டி.
  - இவற்றை வல்லினம் மிகாமல் குரங்கு குட்டி, மருந்து சீட்டு என்று எழுதினால் குரங்கும் குட்டியும், மருந்தும் சீட்டும் என்று பொருள்பட்டு உம்மைத் தொகைகள் ஆகிவிடும்.
- மகர இறுதி கெட்டு உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் மிகல்
  - மரம் + கிளை = மர + க் + கிளை = மர**க்**கிளை
  - குளம் + கரை = குள + க் + கரை = குள**க்**கரை
  - ஆரம்பம் + பள்ளி = ஆரம்ப + ப் + பள்ளி = ஆரம்ப**ப்** பள்ளி

வல்லினம் மிகா இடங்கள்

- அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
  - அது செய், இது காண்.
- ஆ, ஓ ஏ, இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
  - அவனா + தந்தான் = அவனா தந்தான்?
  - அவளோ + கொடுத்தாள் = அவளோ கொடுத்தாள்?
  - அவனா செய்தான்?
- எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
  - குதிரை தாண்டியது, கிளி பேசும்.

- மூன்றாம். ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது.
    - ஆல், ஆன், ஒடு, ஒடு உடண், கொண்டு
    - அண்ணனோடு போ, எனது சட்டை.
- விளித் தொடர்களில் வல்லினம் மிகாது.
    - தந்தையே பாருங்கள், மகளே தா.
- பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
    - வந்த சிரிப்பு, பார்த்த பையன்
    - தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாது.
        - வந்த + பையன் = வந்த பையன்
        - ஓடிய + குதிரை = ஓடிய குதிரை
        - கேட்ட + கேள்வி = கேட்ட கேள்வி
    - குறிப்புப் பெயரெச்சத்தை இக்கால மொழியியலார் பெயரடை (Adjective) என்று குறிப்பிடுவர். இதன் முன் வரும் வல்லினம் மிகாது.
        - பெரிய + தெரு = பெரிய தெரு
        - புதிய + சிந்தனை = புதிய சிந்தனை
        - சிறிய + பேனா = சிறிய பேனா
    - எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை
        - செல்லாத + காசு = செல்லாத காசு
        - காணாத + கண்கள் = காணாத கண்கள்
- இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

- ‘ஐ’ மறைந்து வரும் வேற்றுமைத் தொகை
- நாடு கண்டான், கூடு கட்டு

- படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.
  - வரும்படி சொன்னார், பெறும்படி கூறினார்.
- வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.
  - வாழ்க தமிழ், வருக தலைவா!
- ஏவல் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.
  - வா கண்ணா, போ தம்பி, படி பாடத்தை
- வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
  - குடிதண்ணீர், வளர்பிறை, திருவளர்செல்வன்
- எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.
  - ஒரு புத்தகம், மூன்று கோடி
- உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.
  - தாய்தந்தை, இரவுபகல்
- அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
  - அன்று சொன்னார், என்று தருவார், அவராவது தருவதாவது, யாரடா சொல், ஏனடி செல்கிறாய்?, கம்பரைப் போன்ற கவிஞர் யார்?
- அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை; இத்தனை எத்தனை; அவ்வாறு. இவ்வாறு, எவ்வாறு; அத்தகைய, இத்தகைய, எத்தகைய; அப்போதைய,

இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட; நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.

- அவ்வளவு பெரியது.
- அத்தனை சிறியது.
- அவ்வாறு பேசினான்.
- அத்தகைய பாடங்கள்.
- அப்போதைய பேச்சு.
- அப்படிப்பட்ட காட்சி.
- நேற்றைய சண்டை.

- மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது
  - என்னோடு சேர் (3ம் வேற்றுமை)
  - மரத்திலிருந்து பறி. (5ம் வேற்றுமை)
  - குரங்கினது குட்டி. (6ம் வேற்றுமை).
- இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம். வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது.
  - தமிழ் படி. (ஐ); கை தட்டு.(ஆல்); வீடு சென்றாள். (கு); கரை பாய்ந்தான். (இருந்து)
- நிலைமொழி உயர்திணையாய் அமையும் தொடரில் வல்லினம் மிகாது.
  - தலைவி கூற்று, தொண்டர் படை

- சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.
    - உறு பொருள், நனி தின்றான், கடி காவல்
- அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது.
    - பார் பார், சலசல, கலகல
- கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது (மிகும் என்பர் சிலர்).
    - வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் வந்தால் வல்லினம் மிகுவதில்லை.
        - வாக்குகள், வகுப்புகள்
        - ஆக்குதல், வாழ்த்துதல்
- ஐகார வரிசை உயிர்மெய் ஒரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.
    - பைகள், கைகள்

மாதிரி வினாக்கள்

1. வல்லினம் மிகுமா?

அ) பெட்டி _____ செய்தி - பெட்டிச் செய்தி

ஆ) விழா _____ குழு - விழாக் குழு

இ) கிளி _____ பேச்சு - கிளிப் பேச்சு (உவமை)

ஈ) தமிழ் _____ தேன் - தமிழ்த் தேன் (உருவகம்)

உ) தை _____ பூசம் - தைப் பூசம் (ஒரெழுத்து ஒருமொழி)

ஊ) கூட _____ கொடு - கூடக் கொடு

எ) கத்தியை விட _____ கூர்மை - கத்தியை விடக் கூர்மை

ஐ) கார் _____ பருவம் - கார்ப் பருவம்

2. சந்திப்பிழையற்றத் தொடர்: கதையைப் படித்தேன்

3. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம்: மிகும்

4. கூடி + சென்றான் = கூடிச் சென்றான்

5. பதுங்கி கொண்டான் = பதுங்கிக் கொண்டான்

6. சொல்லி + பார்த்தான் = சொல்லிப் பார்த்தான்

7. புலம்பி + தீர்த்தான் = புலம்பித் தீர்த்தான்

8. அள்ளி + கொடுத்தான் = அள்ளிக் கொடுத்தான்

9. தொடர் தரும் பொருளைக் கூறுக

1) சின்னக்கொடி, சின்னகொடி

- **சின்னக்கொடி:** சின்னம் வரையப்பட்ட கொடி (அடையாளக் கொடி)
- **சின்னகொடி:** சிறிய கொடி

2) தோப்புக்கள், தோப்புகள்

- **தோப்புக்கள்:** தோப்பிலிருந்து இறக்கப்பட்ட கள்
- **தோப்புகள்:** பல மரங்கள் அடர்ந்த பகுதி (மரங்கள் நிறைந்த தோப்பு)

3) கடைப்பிடி, கடைபிடி

- **கடைப்பிடி:** ஒரு கொள்கை அல்லது விதியை உறுதியாகப் பின்பற்றுதல் (பின்பற்றுதல்)
- **கடைபிடி:** வியாபாரத்திற்காகப் புதிய கடை ஒன்றைத் தொடங்குதல் / பிடித்தல்

4) நடுக்கல், நடுகல்

- **நடுக்கல்:** அடையாளமாக நடுவது (நடுகின்ற கல்)
- **நடுகல்:** வீரர்களின் நினைவாக நடப்படும் நினைவுச்சின்னம்

5) கைம்மாறு, கைமாறு

- **கைம்மாறு:** செய்த உதவிக்குத் திரும்பச் செய்யும் உதவி (உதவி செய்தல் / பிரதியுபகாரம்)
- **கைமாறு:** கையை மாற்றுதல் அல்லது ஒருவரிடமிருந்து கைமாறுவது

6) பொய்ச்சொல், பொய்சொல்

- **பொய்ச்சொல்:** நீ சொன்னது பொய் சொல் (பொய்யான வார்த்தை)
- **பொய்சொல்:** பொய் சொல்வது தவறு (பொய் பேசுதல் என்னும் வினை)

7) பனிப்போர், பனி போர்

- **பனிப்போர்:** ஆயுதமின்றி மனதால் நடக்கும் மறைமுகப் போர் (Cold War).
- **பனி போர்:** பனிப் பிரதேசத்தில் நடக்கும் போர் அல்லது பனியைக் கொண்டு விளையாடும் போர்.

8) கத்திப்பேசினான், கத்தி பேசினான்

- **கத்திப்பேசினான்:** சத்தமாகப் பேசினான்
- **கத்தி பேசினான்:** அன்மொழித்தொகை

9) நாடி துடித்தது, நாடித் துடித்தது

- **நாடி துடித்தது:** கையில் உள்ள நாடியானது துடித்தது.
- **நாடித் துடித்தது:** தேடித் துடித்தது.

10) தந்த பெட்டி, தந்தப்பெட்டி

- **தந்த பெட்டி:** பிறர் தந்த பெட்டி
- **தந்தப்பெட்டி:** தந்தத்தால் ஆன பெட்டி

10. வல்லினம் வருமா?

- **அ) தோழி __ கூற்று * விடை:** தோழி கூற்று
    - **இலக்கண விதி:** 'தோழி' என்பது **உயர்திணைப் பெயர்**. உயர்திணைப் பெயர்களின் பின் வரும் வல்லினம் மிகாது.
- **ஆ) பெரிய __ தம்பி * விடை:** பெரிய தம்பி

- **இலக்கண விதி:** 'பெரிய' என்பது **குறிப்புப் பெயரெச்சம்**. பெயரெச்சங்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

- **இ) சிறிய __ பறவை * விடை:** சிறிய பறவை
  - **இலக்கண விதி:** 'சிறிய' என்பது **குறிப்புப் பெயரெச்சம்**. பெயரெச்சங்களின் பின் வரும் வல்லினம் மிகாது.
- **ஈ) பழகு __ தமிழ் * விடை:** பழகு தமிழ்
  - **இலக்கண விதி:** 'பழகு' என்பது **வினைத்தொகை** (பழகிய தமிழ், பழகுகின்ற தமிழ், பழகும் தமிழ்). வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
- **உ) இது __ கேள் * விடை:** இது கேள்
  - **இலக்கண விதி:** 'இது', 'அது' போன்ற **சுட்டுப்பெயர்களின்** பின் வரும் வல்லினம் மிகாது.
- **ஊ) எலி __ கடிக்கும் * விடை:** எலி கடிக்கும்
  - **இலக்கண விதி:** 'எலி' என்பது இங்கு **எழுவாய்த் தொடர்**. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
- **எ) ஓடிய __ குதிரை * விடை:** ஓடிய குதிரை
  - **இலக்கண விதி:** 'ஓடிய' என்பது தெரிநிலை **பெயரெச்சம்**. பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.
- **ஏ) தரும்படி __ சொன்னார் * விடை:** தரும்படி சொன்னார்
  - **இலக்கண விதி:** '**படி**' என்று முடியும் வினையெச்சத் தொடர்களின் பின் வல்லினம் மிகாது.
- **ஐ) வாழ்க __ தலைவர் * விடை:** வாழ்க தலைவர்
  - **இலக்கண விதி:** 'வாழ்க' என்பது **வியங்கோள் வினைமுற்று**. வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.

- **ஒ) கார் __ காலம் * விடை:** கார் காலம்
    - **இலக்கண விதி:** 'கார்' என்பது இங்கு **காலப் பெயர்ச்சொல்** ஆக வந்துள்ளது. காலப் பெயர்களின் பின் பொதுவாக வல்லினம் மிகாது.

11. வல்லினம் இடலாமா?

- **அ) வாழ்த்து __ கள் * விடை:** வாழ்த்துகள்
    - **இலக்கண விதி:** 'கள்' விகுதி சேரும்போது வல்லினம் மிகக் கூடாது. (வாழ்த்துக் கள் என்று எழுதுவது பிழையானது).
- **ஆ) எழுத்து __ கள் * விடை:** எழுத்துகள்
    - **இலக்கண விதி:** 'கள்' பன்மை விகுதி சேரும்போது நிலைமொழி ஈற்றில் வல்லினம் மிகாது.
- **இ) திருநிறை __ செல்வன் * விடை:** திருநிறை செல்வன்
    - **இலக்கண விதி:** மணமகன்/மணமகள் அழைப்பிதழ்களில் பயன்படுத்தப்படும் மரபுத் தொடர்களில் வல்லினம் மிகாது.
- **ஈ) திருவளர் __ செல்வி * விடை:** திருவளர் செல்வி
    - **இலக்கண விதி:** வினைத்தொகைத் தன்மையுடைய இத்தொடர்களின் இடையில் வல்லினம் மிகாது.

11. வல்லின மெய் இட்டும் நீக்கியும் எழுதுக

1. கடமையை செய்; பலனை கேள்

   விடை : கடமையைச் செய்; பலனைக் கேள்.

2. மர பொருள்கள் வாடகைக்கு கிடைக்கும்.

   விடை : மரப் பொருள்கள் வாடகைக்குக் கிடைக்கும்.

3. திரைபடம் காண வருக.

   விடை : திரைப்படம் காண வருக.

4. வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

விடை : வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

5. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.

விடை : அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.

6. புகை உடல்நலத்திற்கு கேடு.

விடை : புகை உடல்நலத்திற்குக் கேடு.

7. மரம் வளர்ப்போம்; மழையை பெறுவோம்.

விடை : மரம் வளர்ப்போம்; மழையைப் பெறுவோம்.

8. நெகிழிப்பையை புறக்கணிப்போம்; நெடுநாள் வாழ்வோம்

விடை : நெகிழிப்பையைப் புறக்கணிப்போம்; நெடுநாள் வாழ்வோம்

9. இறைவனை தொழுவோம்; இன்பமுடன் வாழ்வோம்.

விடை : இறைவனைத் தொழுவோம்; இன்பமுடன் வாழ்வோம்.

10. இயற்கை உரமே வேளாண்மைக்கு சிறந்த உரம்.

விடை : இயற்கை உரமே வேளாண்மைக்குச் சிறந்த உரம்.

11. சித்திரை திங்களில் வந்து பார்க்கும் படிக் கூறினான்.

விடை : சித்திரைத் திங்களில் வந்து பார்க்கும் படிக் கூறினான்.

12. வ.உ.சிதம்பரனார்ச் செய்ந்நன்றி மறவா செம்மல் ஆவார்.

விடை : வ.உ.சிதம்பரனார் செய்ந்நன்றி மறவாச் செம்மல் ஆவார்.

13. இராமன் மாயமானை தேடி சென்றான்.

விடை : இராமன் மாயமானைத் தேடிச் சென்றான்.

14. சொற்களை பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படுத்துவர்.

விடை : சொற்களைப் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படுத்துவர்.

15. சிரிக்க தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இரவு ஆகும்.

விடை : சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இரவு ஆகும்.

16. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.

    விடை : அந்தப் பையனை நன்றாகப் படிக்கச் செய்தல் வேண்டும்.

17. வந்த பையன் சொன்னச் செய்தியை பொறுமையாக கேட்டல் வேண்டும்.

    விடை : வந்த பையன் சொன்னச் செய்தியைப் பொறுமையாகக் கேட்டல் வேண்டும்.

18. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டு பலரும் வியந்தனர்.

    விடை : நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளைக் கண்டு பலரும் வியந்தனர்.

19. கபிலப்பரணர் தமிழ் புலவர்கள்.

    விடை : கபிலப்பரணர் தமிழ்ப் புலவர்கள்.

20. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர் நன்மை தீமைகளை அறிவார்.

    விடை : கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர்கள் நன்மை தீமைகளை அறிவர்.

11. ஒற்றெழுத்தைச் சேர்த்து எழுதுங்கள்

1. அ + களம் = அக்களம்
2. அ + காற்று = அக்காற்று
3. அ + காலம் = அக்காலம்
4. அ + கூட்டம் = அக்கூட்டம்
5. அ + குளம் = அக்குளம்
6. அ + சக்கரம் = அச்சக்கரம்
7. அ + சமயம் = அச்சமயம்
8. அ + தம்பி = அத்தம்பி
9. அ + தோட்டம் = அத்தோட்டம்
10. உ + பக்கம் = உப்பக்கம் *(உ - சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்டதைக் குறிக்கும் சுட்டு)*
11. இ + கத்தி = இக்கத்தி

12. இ + குதிரை = இக்குதிரை
13. இ + செடி = இச்செடி
14. இ + சொல் = இச்சொல்
15. இ + தடி = இத்தடி
16. இ + திண்ணை = இத்திண்ணை
17. இ + படம் = இப்படம்
18. இ + பறவை = இப்பறவை
19. எ + கட்சி = எக்கட்சி
20. எ + காடு = எக்காடு
21. எ + சக்கரம் = எச்சக்கரம்
22. எ + சாதி = எச்சாதி
23. எ + தெரு = எத்தெரு
24. எ + தோட்டம் = எத்தோட்டம்
25. எ + பாடம் = எப்பாடம்

முந்தைய ஆண்டு வினாக்கள்

1. கீழ்க்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கணக்கூற்றில் பிழையான கூற்று எது? (TNPSC/SABT-2017)

A) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது

B) வினைத்தொகையில் வல்லினம் மிகாது

C) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது

D) உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது

விடை: C) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது

விளக்கம்: இரண்டாம் வேற்றுமை விரியில் (அதாவது 'ஐ' உருபு வெளிப்பட்டு வரும் தொடர்களில்) வல்லினம் **மிகும்**. (e.g., கதவைத் திறந்தான்).

2. கீழ்க்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கணக் கூற்றில் பிழையான கூற்று எது? (TNPSC/GTBA-14)

A) வினைத்தொகையில் வல்லினம் மிகாது

B) உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது

C) இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது

D) நான்காம் வேற்றுமை விரியில் வரும் வல்லினம் மிகாது

விடை: D) நான்காம் வேற்றுமை விரியில் வரும் வல்லினம் மிகாது

விளக்கம்: நான்காம் வேற்றுமை விரியில் (அதாவது 'கு' உருபு வெளிப்பட்டு வரும் தொடர்களில்) வல்லினம் கண்டிப்பாக **மிகும்**. (e.g., எனக்குத் தெரியும், வீட்டுக்குச் சென்றான்). எனவே, "வல்லினம் மிகாது" என்று குறிப்பிடப்பட்டுள்ள இக்கூற்று பிழையானது.

3. சந்திப் பிழை: (TNPSC/CAGS/2022)

கதையை படித்தேன்

A) கதை படித்தேன்

B) கதையைப் படித்தேன்

C) கதையில் படித்தேன்

D) கதையால் படித்தேன்

விடை: B) கதையைப் படித்தேன்

விளக்கம்: 'கதையை' என்பது இரண்டாம் வேற்றுமை விரி (ஐ உருபு வெளிப்பட்டு வந்துள்ளது) ஆகும். இரண்டாம் வேற்றுமை விரியின் பின் வல்லினம் மிகும் என்ற விதிப்படி, 'படித்தேன்' என்ற சொல்லின் முதலெழுத்தான 'ப' கரத்திற்கு இனமான 'ப்' மிகுந்து **'கதையைப் படித்தேன்'** என்று வருவதே சரியானது.

4. வல்லினம் மிகா இடத்தைக் காண்க. (TNPSC/DPGS/2022)

A) குடி தண்ணீர் B) கனா கண்டேன்

C) தனி சிறப்பு D) பூ பந்தல்

விடை: A) குடி தண்ணீர்

விளக்கம்: 'குடி தண்ணீர்' என்பது வினைத்தொகை (குடித்த தண்ணீர், குடிக்கின்ற தண்ணீர், குடிக்கும் தண்ணீர் என முக்காலமும் மறைந்து வந்துள்ளது) ஆகும். இலக்கண விதிப்படி வினைத்தொகையில் வல்லினம் மிகாது. எனவே **'குடி தண்ணீர்'** என்பதே வல்லினம் மிகா இடத்திற்குரிய சரியான சான்றாகும். (மற்றவை: கனாக்கண்டேன் - ஒகார ஈற்று நிலைமொழி, தனிச்சிறப்பு - 'தனி' என்னும் சொல்லின் பின், பூப்பந்தல் - பெயர்ச்சொல் ஈறுகளின் விதிகளின்படி வல்லினம் மிகும் இடங்களாகும்).

5. சந்திப்பிழை அற்ற வாக்கியங்களைக் கூறுக. (TNPSC/VCGS/2022)

A) அந்தக் காட்சியைப் பார்

B) அந்தக் காட்சியை பார்

C) அந்த காட்சியை பார்

D) அந்த காட்சியைப் பார்

விடை: A) அந்தக் காட்சியைப் பார்

விளக்கம்: * 'அந்த', 'இந்த' என்னும் சுட்டுத் திரிபுகளின் பின் வல்லினம் மிகும் என்ற விதிப்படி 'அந்த' + 'காட்சி' = **அந்தக் காட்சி** என்றாகிறது.

- இரண்டாம் வேற்றுமை விரியின் ('ஐ' உருபு வெளிப்படும் தொடர்) பின் வல்லினம் மிகும் என்ற விதிப்படி 'காட்சியை' + 'பார்' = **காட்சியைப் பார்** என்றாகிறது.
- இவ்விரு விதிகளின்படி **'அந்தக் காட்சியைப் பார்'** என்பதே சந்திப்பிழையற்ற சரியான வாக்கியமாகும்.